**திவிநெகும நிதியம் - 2015**

திவிநெகும நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன அவை இடம்பெற்ற குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் பேணப்பட்டு வரும் 1260 கட்டிடங்களுக்கான பெறவேண்டிய வாடகை ரூபா 15,120,000 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குப் பதிலாக தேறிய உள்ளபடியான வருமானம் ரூபா 10,387,460 மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியம இலக்கம் 02 இன் அறிவுறுத்தல்களுக்கு முரணாக மீளாய்வாண்டில் மிகையில் உள்ளங்கடப்பட்ட பெறவேண்டிய முதலீட்டு வட்டியான ரூபா 34,588,038 ஆனது செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் அல்லாத ஆனால் ரூபா 742,621,040 ஆனது காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வங்கிச் சங்க ஊக்குவிப்பு மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் முதலீடுகளின் முதிர்வான மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 16,048,183 ஆனது இந்நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 இணக்கப்பாடத கட்டுப்பாட்டுக் கணக்கு

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட விபரப் பட்டியல்களின் பிரகாரம் முதலீடுகளுக்கான மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய தேறிய வட்டி ரூபா 34,588,038 என்பதுடன் அது ரூபா 33.525,463 ஆக ரூபா 1,062,575 ஆல் குறைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.4 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டியதொகை மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை மற்றும் பெற வேண்டிய விவசாயத் தொகை மிகுதிகள் முறையே ரூபா 10,350,042 மற்றும் ரூபா 7,480,400 சம்பந்தமாக விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் என்பன சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் காசுப் புத்தகத்தின் பிரகாரம் மிகுதி ரூபா 1,255,708 என்பதுடன் அது ரூபா 1,330,622 ஆக ரூபா 74,914 ஆல் அதிகமாக வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் வங்கி இணக்கக்கூற்றில் விடயங்கள் காட்டப்படாது காசுப் புத்தகத்தின் மிகுதிக்கு ரூபா 10,800 ஆனது கூட்டப்பட்டு காட்டப்பட்டிருந்ததுடன் நேரடிப் பெறுவனவு, காசுப் புத்தகத்தில் இரு தடவைகள் குறிப்பிடப்பட்டமை மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 72,738 ஆனது கணக்கு சீராக்கலுக்கான நடவடிக்கை இன்றி வங்கி இணக்கக் கூற்றுக்கு உள்ளடக்கப்பட்ட காரணத்தால் காசுப் பத்தக மிகுதியின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு**

2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட 3 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 212,000,000 மற்றும் ஊழியர்களின் கடன் சுழலும் நிதியத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபா 15,928,127 என்பவை கணக்காய்வுத் திகதி வரையில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3(ஆ) பந்தி | நிதியம் சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இந்த நிதியம் தொடர்ந்தும் பேணப்படுவதற்கான தேவைப்பாடு சம்பந்தமாக மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 | நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மூலம் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 87,064,477 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 104,701,961 ஆனதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 17,637,484 ஆன பின்னடைவு காணப்பட்டது. முதலீடுகளுக்கான வட்டி வருமானம் உள்ளடங்கலாக மொத்த வருமானம் ரூபா 20,284,130 ஆல் குறைவடைந்தமை இப்பின்னடைவிற்கு பிரதான தாக்கமளித்திருந்தது.

## 3.2 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும (சமுர்த்தி) அதிகாரச்சட்டத்தின் 44(ஆ) பிரிவின் பிரகாரம் திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தி திணைக்களத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட அதிகார சபைகளின் அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களும் அரசிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் மேல்நாட்டு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 16,130,842 ஆனது அரசின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது நிதியத்தின் கீழ் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

திறைசேரி ஒதுக்கங்களுக்குப் புறம்பாக வருமானம் உழைக்கும் செயற்திட்டங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான வங்கிகள்/ வங்கிச் சமூகங்கள் என்பவற்றை கட்டியெழுப்புவதற்கான தேவையான நிதி வசதிகளை வழங்குதல் இந்நிதியத்தின் நோக்கங்களாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எவ்வித செயற்பாடுகளும் செயற்படுத்தப்படவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 4 வருட காலத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் முறையாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது.